**செய்தி வெளியீடு எண்: 337** **நாள்: 22.06.2013**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.6.2013 அன்று தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை சார்பில் தமிழகம் முழுவதும் 58 கோடியே 23 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 15 புதிய பாலங்களையும், 14 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சென்னையில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு கடல்சார் வாரிய அலுவலகக் கட்டடத்தையும், 4 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழகம் முழுவதும் கட்டப்பட்டுள்ள 15 புதிய கட்டடங்களையும் திறந்து வைத்தார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டம், பெரும்பாக்கம் சாலையில், கிளியாற்றின் குறுக்கே 1 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலம்; விழுப்புரம் மாவட்டம், அகரக்கோட்டாலத்தில் மணிமுத்தாற்றின் குறுக்கே 2 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலம்; அரியலூர் மாவட்டம், குழுமூரில் ஆணைவாரி ஓடை குறுக்கே 2 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரியில் வெட்டாற்றின் குறுக்கே 3 கோடியே 8 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

திருப்பூர் மாவட்டம், கூலிப்பாளையத்தில் 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ரயில்வே கடவு எண்.130–க்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள மேம்பாலம் மற்றும் மங்கலத்தில் 2 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலம்;

கோயம்புத்தூர் மாவட்டம், நீலாம்பூரில் 12 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ரயில்வே கடவு எண்.143–க்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள மேம்பாலம்; கரவல்லி மாதப்பூர் – செங்கதுரை குமாரபாளையம் சாலையில் நொய்யல் ஆற்றின் குறுக்கே 1 கோடியே 99 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

மதுரை மாவட்டம், கண்டுகுளத்தில் 1 கோடியே 93 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலம்; திண்டுக்கல் மாவட்டம், வெரியப்பூர் அருகில் 2 கோடியே

10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; விருதுநகர் மாவட்டம், கிருதமாலில் 4 கோடியே 9 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; திருநெல்வேலி மாவட்டத்தில் 94 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலம் மற்றும் வேட்டைக்காரன்குளத்தில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

தூத்துக்குடி மாவட்டம், சின்னூரில் காட்டாற்றின் குறுக்கே 2 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலம்; கன்னியாகுமரி மாவட்டம், வழுக்கம்பாறையில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

என மொத்தம் 58 கோடியே 23 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 15 புதிய பாலங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தில் திறந்து வைத்தார்கள்.

மேலும், சென்னை, கீரின்வேஸ் சாலையில் 14 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் தலைமை அலுவலகக் கட்டடம்; காஞ்சிபுரம் மாவட்டம் மதுராந்தகத்தில் 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உட்கோட்டம் மற்றும் பிரிவு அலுவலகக் கட்டடம்; திருவண்ணாமலை மாவட்டம் செய்யாரில் 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உட்கோட்ட அலுவலகக் கட்டடம்; சேலம் மேற்கில் 22 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பயணியர் மாளிகை; ஏற்காட்டில் 88 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பயணியர் மாளிகை; கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரத்தில் 17 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உட்கோட்டம் மற்றும் பிரிவு அலுவலகக் கட்டடம்; திருவள்ளூர் மாவட்டம் அம்பத்தூரில் 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உட்கோட்ட அலுவலகக் கட்டடம்;

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை, ஆனைமலையில் 27 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பயணியர் மாளிகை; கோயம்புத்தூர் தெற்கு கோட்ட அலுவலக வளாகத்தில் 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பயணியர் மாளிகை; மேட்டுப்பாளையம் உட்கோட்டத்தில் 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்

கட்டப்பட்டுள்ள புதிய பயணியர் மாளிகை; சூலூரில் 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உட்கோட்டம் மற்றும் பிரிவு அலுவலகக் கட்டடம்;

தேனி மாவட்டம், பெரியகுளத்தில் 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தரக்கட்டுப்பாடு ஆராய்ச்சி உட்கோட்டம், பிரிவு அலுவலகம் மற்றும் ஆய்வகக் கட்டடம் மற்றும் 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பயணியர் மாளிகை; போடிநாயக்கனூரில் 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பயணியர் மாளிகை;

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் 22 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பயணியர் மாளிகை; இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் 14 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உட்கோட்டம் மற்றும் பிரிவு அலுவலகக் கட்டடங்கள்;

என மொத்தம் 19 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.6.2013 அன்று தலைமைச் செயலகத்தில் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் துணைத் தலைவர் மற்றும் தலைமை செயல் அலுவலர், நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்: 22.6.2013